RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1968

OPEN ACCESS

# சைவ சமயத்தில் இயற்கை அறம்

**அ. கமலம்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா

# Nature Related Virtue in Saivism

**A. Kamalam** [a, *]

[a] Department of Tamil, Lady Doak College, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author: kamalam@ldc.edu.in

Received: 13-09-2022
Revised: 30-10-2022
Accepted: 06-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Nature is the most important thing when it comes to religions. Preserving nature and seeing nature as God are considered as a moral value among Tamil people. Seeking spirituality through nature is a sacred thing. During Covid-19 we realize that it is our duty to love nature and to maintain clean environment even if we are under social distancing, isolation and self-defense. That was a good time in restoring nature. Tamil people have witnessed various religious practices and religious literatures. National and international religions spread divine principles in Tamil Nadu, Jainism, Buddhism, Saivism, Vaishnavism, Christianity and Islam grew and flourished in our country. Tamil grew out of these religions and in turn religions grew out of Tamil. Saivism was enriched by devotional hymns sung by sixty-three diviners. Hinduism and nature cannot be separated. Nature is considered as a religion. The idea was to create separate shrines for the five elements, to maintain it and protect living beings and plants by associating them with the gods. Saivisim encouraged the conservation of the natural environment.

**Keywords:** Saivism, Nature Related, Tamil People, Love

## முன்னுரை

சமயம், மதம் என இரு சொற்களையும் எடுத்துக்கொண்டால் இரண்டும் ஒரே பொருளைத் தருவனவாகும். ஆயினும் சொல்லாட்சி பயன்பாட்டில் சமயத்திற்குக் கொடுக்கப்படும் சிறப்பினை மதத்திற்கு அளிப்பதில்லை. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ‘சமையம்’ என்னும் சொல்லே ‘சமயம்’ என்றாயிற்று எனக் குறிப்பிடுகிறார். ‘சமைத்தல்’ என்னும் தொழிற் பெயரின் பகுதியே ‘சமை’ என்பது. இதன் பொருள் ‘பக்குவப்படுத்துதல்’ என்பதாகும்.

சைவ சமயத்தின் கலைச்சொல்லாக்கம் பற்றிக் கூறும்போது, அ.மா. பரிமணம் என்பவர், ‘இறைநெறியில் நின்று, இறையருளைப் பெற்று, இறையடி சேர்தலால் முக்திப்பேறுக்கு நம்மைப் பக்குவமடையச் செய்வது சமயம்’ எனச் சமயத்திற்கான சொல் விளக்கமளிக்கிறார். இத்தகைய மனித மனங்களைப் பக்குவப்படுத்தும் சமயங்கள் பலவுள்ளன. ஒவ்வொரு சமயத்திலும் இறைவன் இயற்கையோடு தொடர்புபடுத்தப்படுகிறார். இந்துசமயம், கிறித்தவம், இஸ்லாமியம், பௌத்தம், சமணம் என ஒவ்வொன்றும் இறைவன் படைத்த இயற்கையில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் இறை இருப்பதாக விளக்குகின்றது. ஒவ்வொரு சமயமும் இயற்கை பற்றிக் கூறுவதன் காரணம் என்னவெனில், இயற்கைப்பொருளைப் பாதுகாக்கவும் இயற்கைக்கு மதிப்புத்தரவும், இயற்கையை மரியாதையுடன் நடத்தும் பொருட்டே. இந்து சமயத்தில் இயற்கை இறைவனை வழிபட்டு,

இறைத்தொண்டு புரிவதாகக் காட்டப்படுகிறது. மனிதர்களால் இழிந்த உயிர்களாகக் கருதப்படுபவை இந்து சமயத்தில் உயர்விடம் பெறுகின்றன. முஞ்சூறு, நாய், குரங்கு, பாம்பு முதலியன கடவுளரின் வாகனங்களாக அறங்களைக் கற்றுத் தருவனவாகக் கருதப்படுகின்றன. கடவுளின் உறைவிடத்தில் தீர்த்தம், விருட்சம் ஆகியன இறைவழிபாட்டில் தூய்மையைக் கடைபிடிக்கும் நோக்கில் அமைந்திருக்கின்றன.

## தொல்பழம் சமயம்

தொல்பழம் சமயத்தில் இறைவனுக்கு உருவம் தராது, இயற்கையில் கண்ட ஒவ்வொரு பொருளையுமே இறையாகக் கருதிப் போற்றினர். ஆரம்பகால மக்கள் இயற்கையைப் புரிந்து அனுபவப்பூர்வமாக அதை எதிர்க்க வேண்டிய சூழ்நிலையில் அந்த எதிர்ப்பைச் சமயத்தின் வடிவமாக்கினர். உதாரணமாக, பாம்பினைக் கண்ட மனிதன் அதனால் தமக்குத் தீங்கு வருமெனக் கருதி எதிர்த்து, பின் தெய்வமாகப் போற்றிய பாங்கினை இங்குக் கூறலாம்.

ஸர் எட்வேர்டு லேர்நர் டெய்லர் என்பவர் “வரலாற்றுக் காலத்துக்குப் பின்பு மனிதன் கைக்கொண்ட வாழ்வுநிலைகளை எப்படிச் சமயம் என்று கூறலாமோ அது போலவே வரலாற்றுக் காலத்திய சமூகப் பண்பாட்டின் ஒரு பகுதியைச் ‘சமயம்’ என்ற சொல்லால் குறிக்க வேண்டும். அதைத் ‘தொல்பழம் சமயம்’ என்ற சொல்லால் குறிப்பது பொருத்தமானது என்கிறார்” (Perumal, 2013).

இக்கூற்றுப்படி தொல்பழம் சமய அடிப்படையிலிருந்து பிறசமயங்கள் தோன்றியிருக்க வாய்ப்புண்டு. தொல்பழம் சமயத்தில் தனக்கு அப்பாற்பட்ட கடவுள்களை நல்லன, தீயன என வகைப்படுத்தினர். இப்பிரிப்பு முறைக்குக் காரணம், அத்தெய்வங்களால் அவர்களுக்குக் கிடைத்த நன்மை, தீமைகளேயாகும். இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்விற்குத் தேவையான அனைத்து காரியங்களையும் இதே அடிப்படையில் பிரித்து வாழ்ந்தனர். தொல்பழம் சமயத்தில் கோவில் தொடர்பான எல்லா இடங்களும் புனிதமாகக் கருதப்பட்டன. இதற்குக் காரணம் பழங்காலத்தவரின் அச்சவுணர்வேயாகும். எனவே அனைத்து இடங்களையும் தூய்மையுடையதாகக் காத்துக் கொண்டனர்.

‘மனிதனின் அச்சஉணர்ச்சியிலிருந்தும் குற்றஉணர்ச்சியிலிருந்தும் தான் இறைவழிபாடு தோன்றியது’ என்ற சிக்மண்ட் பிராய்டின் கூற்று குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் தொல்பழ மக்களின் அச்ச உணர்ச்சியிலிருந்து இறை வழிபாடு தோன்றியிருக்க வாய்ப்புண்டு எனலாம். மனிதர்களுக்கு உண்டான இந்த அச்சத்தின் விளைவாகவும், பயிர் வளத்தைப் பெருக்கும் விருப்பத்தாலும், மனித உயிர்களின் இறப்பு, பிறப்பு ஆகியவற்றை நினைவுகூரும் வண்ணமாகவும் வழிபாட்டுமுறைகள் உருவாகின்றன எனச் சமூகவியலார் பாகுபடுத்துவர்.

“இயற்கை பொருளின் ஆற்றலை வழிபடுவது, ஆவியை வழிபடுதல், கல் - மரக்கட்டையை வழிபடுதல், இறந்த முன்னோரின் ஆவியை வழிபடுதல், மரம், விலங்கு போன்ற இயற்கைப் பொருளை வழிபடுதல் எனத்தொடங்கி ஒரு நாட்டின் தட்பவெப்பநிலை, இயற்கையின் மாற்றங்கள், சாதிப்பாகுபாடு ஆகியவற்றின் அடிப்படையிலும் வழிபாட்டு முறைகள் மாற்றமடையும.” இயற்கையை வழிபட்டிருந்த நிலை படிப்படியாக முன்னேறி இயற்கையில் இறைவன் கலந்துள்ளதையும் இயற்கை இறையை வழிபடும் பல்வேறு காட்சிகளையும் சமயங்கள் முன்வைக்கின்றன (Subbu Reddyar, 1982).

## இயற்கை - இறை வடிவத்தில் அறம்

சைவ சமயத்தில் இறைவனின் வடிவங்களாக, அருவம், உருவம், அருஉருவம் ஆகிய மூன்றும் குறிக்கப்படுகின்றன. இறைவனின் வடிவநிலைகளில் இயற்கையும் உள்ளடங்குகிறது என்பார் ந. சுப்புரெட்டியார்,

‘அருவம் என்பது காட்சியளவையால் அறியப்படாது கருதலளவையால் அறியப்படுவது’ (எ-கா) ஆகாயம்.

'உருவம் என்பது காட்சியால் அறியப்படுவது'(எ-கா) நிலம், நீர் முதலியவை.

'அருவுருவம் என்பது ஒருகால் காட்சியால் அறியப்பட்டும் ஒருகால் காட்சியால் அறியப்படாமலும் இருப்பது' (எ-கா) தீ, காற்று இவை கண்ணுக்குப் புலனாகாவிடினும் உற்றுணர்விற்குப் புலனாவதால் உருவமுடையதாகக் கொள்ளப்படும்'

என இறைவடிவத்தை ஐம்பூதங்களோடு ஒப்புமைப்படுத்துகிறார் (Thayanandhan, 2012). மேலும் இறைவனுடைய திருமேனி வடிவினை மூன்று வகையாகச் சைவசித்தாந்தம் கூறுகிறது. இறைவன் தன் பொருட்டு எந்தவொரு வடிவத்தையும் விரும்பாதவனாகவும் ஆருயிர்களின் பயன் கருதியே இவ்வடிவங்களை மேற்கொண்டுள்ளதையும் அறிய முடிகிறது.

இறைவடிவிற்கு மற்றொரு விளக்கம், அருவம்-கண்ணுக்குப் புலனாகாத உருவம், உருவம் - கட்புலனாய் திணைபால் உணரும் தன்மையில் திகழ்வது, அருவுருவம் - கட்புலனாகியும் திணைபால் உணர முடியாதநிலை என தி.தயானந்தன் பிரான்சிஸ் குறிப்பிடுகிறார்.

இறைவனின் அருவுருவத்தை விளக்கச் சிவாலயங்களில் சிவலிங்கம் உள்ளது. இது திணைபால் அறிய முடியாதபடியும் உருவம், அருவம் என வரையறை செய்ய முடியாதபடியும் விளங்குவது. இறைவடிவம் இயற்கையோடு ஒன்றிணைந்ததைக் காணமுடிகிறது. இயற்கையில் இறைவடிவத்தைக் காணும்போது இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற அறம் உணர்த்தப்படுகிறது.

## இறைத்தொழிலில் வெளிப்படும் அறம்

ஒவ்வொரு கடவுளருக்கும் ஒவ்வொரு வகையான செயல்கள் இருந்தாலும் சிவனுக்கென ஐந்து தொழில்கள் சுட்டப்படுகின்றன. சிவனின் நடராசத் தோற்றமே இந்த ஐந்து தொழில்களையும் விளக்குவதாகக் குறிக்கப்படுகிறது. இவ்வுலகம் முழுவதையும் இறைவன் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் வெற்றியைத் தான் சிவனின் தோற்றம் காட்டுகிறது. 'துடிசேர் கரம்' படைத்தல் தொழிலையும் 'அபயகரம்' காத்தல் தொழிலையும் 'தீயேந்திய கரம்' அழித்தல் தொழிலையும் 'ஊன்றிய திருவடி' மறைத்தல் தொழிலையும் 'தூக்கிய திருவடி' அருள்புரிதல் தொழிலையும் சுட்டுகின்றன.

"உடுக்கை ஏந்திய கையால் இறைவன் மாயையை நீக்குகின்றான். தீயேந்திய கரத்தால் வல்வினையைச் சுட்டெரிக்கின்றான். ஊன்றிய திருவடியால் மலம் (ஆணவம், கன்மம், மாயை) மேலிடாமல் அமுக்குகின்றான். தூக்கிய திருவடியால் அருள் வழங்குகின்றான். நேயத்தால் அமைந்த கரத்தினால் ஆன்மாவை ஆனந்த வெள்ளத்தில் அழுந்துமாறு செய்கின்றான். இதுவே இறைவனின் திருக்கூத்து முறைமை" என்கிறார்." இதன்வழி இயற்கை பாதுகாத்தல் என்ற அறக்கொள்கையை இறைத்தோற்றம் காட்டுகிறது (Maruthidasan, 2015).

## தலம் - தீர்த்தம் பற்றிய அறக்கருத்துக்கள்

தலம் என்பது இறைவனின் திருக்கோயில் அமைந்துள்ள இடத்தைக் குறிக்கும். தலத்தை 'சேஷத்திரம்' என்பர். திருத்தலங்களை நினைத்தாலும் முக்தி கிடைக்கும் என்பது இந்து சமயக் கருத்து. அடியார்கள் புகழ்ந்து பாடிய திருத்தலத்தையும் ஆண்டவன் இருக்கும் திருத்தலத்தையும் பக்தர்கள் தம் கால்களால் தீண்டி மிதித்தல் பாவம் எனக் கருதுவர். இதனால் தலவழிபாடும் இறைவழிபாட்டுக்கு ஒப்பாகவே எண்ணுவது இந்துசமயக் கொள்கையாக உள்ளது.

## தீர்த்தம்

இந்து சமயத்தவர் தங்கள் பாவத்தைப் போக்கிக் கொள்ளவும் மனஅமைதி பெறவும், நற்கதி அடையவும் வேண்டி மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றையும் நாடி வழிபடுவர். மூர்த்தியர் எழுந்தருளும் திருக்கோயிலைச் சார்ந்து தீர்த்தமும் இருக்கும். தீர்த்தம் என்பது புனிதநீரைக் குறிக்கும். தூயநீர் வேறு புனிதநீர் வேறு புனிதநீர் என்பது தெய்வத்தன்மை பொருந்திய நீராகும். தெய்வத்திற்கு

எவ்வளவு ஆற்றல் உண்டோ அவ்வளவு ஆற்றல் தீர்த்தத்திற்கும் உண்டு என்பது இந்து சமயக்கருத்து. தீர்த்தம் என்பது ஒவ்வொரு தலத்திலும் காணப்படும். பொதுவாக ஆறுகளே சிறந்த தீர்த்தங்களாக வணங்கப்பெறுகின்றன. கங்கை, காவிரி ஆகிய ஆறுகள் இரண்டும் கடவுளோடு சம்பந்தப்பட்டவையாகும். எனவே கங்கையும் காவிரியும் கடவுளைப் போலவே மதிக்கப்பட்டு வருகின்றன.

தீர்த்தத்தின் முக்கியத்துவம் பற்றி மாருதிதாசன் கூறுகையில்,

"நதிகளைப் போலவே திருக்குளங்களும் தீர்த்தமாக மதிக்கப்பெறும். எனவேதான் ஒவ்வொரு தலத்தைச் சார்ந்தும் ஒவ்வொரு தீர்த்தம் காணப்படுகிறது. தீர்த்தத்தில் நீராடித் தம் பாவத்தைப் போக்கிக் கொள்வதுண்டு. தீர்த்தத்தைப் பருகியும் ஆன்மலாபம் பெறுவோர் உண்டு. எனவே, இறைவன் சம்பந்தப்பட்ட தீர்த்தமும் இறைவனைப் போலவே வழிபடுதற்குரியது என்பதே இந்துசமயக் கருத்து' எனக் கூறுகிறார் (Maruthidasan, 2015).

ஆங்காங்குள்ள கோயில்கள் 'புண்ணியத்தலங்கள்' எனவும் அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி, கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்டால், பாவங்களிலிருந்து விலகி நல்வாழ்வை அடையலாம் எனத் தலபுராணங்கள் கூறுகின்றன. தீர்த்தம் என்னும் சொல், துறை, வழி ஆகிய பொருள்களைக் கொண்டுள்ளது. இது மக்கள் ஆற்றில் இறங்கிக் குளிக்கும் இடத்தையும் குறிக்கும். உடல் தூய்மை பெற்றவுடன் இறைவனை வழிபட, அந்நீர்நிலை அருகே விநாயகர் அல்லது சிவன் அல்லது திருமால் திருவுருவத்தை மக்கள் நிறுவி அதை வழிபட்டனர். இங்ஙனம் தெய்வத்திருவுருவங்கள் விளங்கப்பெற்ற இந்நீர்நிலைகள் 'தீர்த்தங்கள்' என அழைக்கப்பட்டன. மக்கள் வேள்வி செய்வதையும், உடலை வருத்தித் தவம் செய்வதை விடவும் யாத்திரை மேற்கொண்டு புனித தீர்த்தங்களில் நீராடி அங்குள்ள கோயில்களில் வழிபாடு செய்தலை எளிதாகக் கருதினர். இதனால் தீர்த்தக் கரைகளில் கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்கள் அமைந்த இடங்களில் நீர்நிலைகள் இல்லையென்றால் அங்குக் குளமோ, கிணறுகளோ அமைக்கப்பட்டன. இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன போற்றப்படுகின்றன. தீர்த்தம் இறைவனுக்குச் சரிநிகராகப் போற்றப்பட்டது. இதனைத் திருநாவுக்கரசர், 'சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே' என்று குறிப்பிடுகிறார். தாயுமானவர் இதனை,

'மூர்த்திதலம்தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' எனக் குறிப்பிடுகிறார் (Muthusamypillai, 2012).

எனவே தீர்த்தம் என்பது கடலாகவோ, ஆறாகவோ, கிணறாகவோ, குளமாகவோ காணப்படுகிறது. திருக்கோயிலில் திருவுருவங்களுக்கு அபிடேகம் செய்வதற்கு இந்தத் தீர்த்தங்களின் புனிதநீர் பயன்படுத்தப்படுகிறது. இதன்வழி நீர்த்தூய்மை என்ற அறம் போற்றப்படுகிறது.

## தலவிருட்சம்

கோயில்கள் முதலில் மரத்தொகுதிகளுக்கிடையே அமைந்தன. அதன் பின் மலையுச்சிகள், சோலைகள், நீர்க்கரைகள் போன்றவற்றில் கோயில் அமைக்கும் முறை நடைமுறைக்கு வந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தில் தமிழரின் நிலப்பாகுபாடான ஐவகை நிலங்களும் உள்ளன. "நம் முன்னோர் கோயில்தோறும் மரம் ஒன்றை வைத்து அதற்கு ஆராதனையும் வழிபாடும் நடத்தி மரத்திடம் பக்தி செலுத்தி வந்தார்கள். கோவிலில் வைத்து வழிபடுகிற மரத்திற்குத் தலவிருட்சம் என்று பெயர் (Sanmugasundaram, 2012)."

மரங்களை வழிபடும் வழக்கம் பற்றிப் பேராசிரியர் மோனியர் வில்லியம்ஸ் கூறும்போது, "மரங்கள், புதர்கள், செடிகள் ஆகியவற்றினுள்ளே தெய்வ ஆற்றல் திரட்டின் மிக மேம்பட்ட இயற்கைத் தன்மைகள் இருப்பதாகக் கருதப்படுவதை முன்னிட்டு அவற்றை வழிபடுதல் எங்குமே பரவலாயிற்று" எனக் கூறுகிறார். எண்ணற்ற தென்னிந்தியக் கோயில்கள் மரங்களுடனும் காடுகளுடனும் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. (சான்று) திருவாலங்காடு, திருவேற்காடு.

திருக்குற்றாலத்தில் பலாமரமும் திருப்பெருந்துறையில் குருந்தமரமும் திருவரங்கத்தில் புன்னை மரமும் திருவிடை மருதூரில் மருதமரமும் கரிவலம்வந்த நல்லூரில் களாமரமும் சிதம்பரத்தில் வில்வமரமும் தலவிருட்சங்களாக உள்ளன. மேலும் திருவெண்காடு, திருமறைக்காடு எனத் தனிமரத்தின் பெயரில்லாமல் காடு எனவும், பூந்தோட்டம் எனவும் பல ஊர்ப்பெயர்கள் உள்ளன. சந்தனத்தோப்பு எனத் தோப்பைப் பெயராகக் கொண்ட ஊர் சேர நாட்டிலுள்ளது. திருநெல்வேலிக்கு மூங்கில் வனம் என்பதும் மதுரைக்குக் கடம்பவனம் என்பதும் மரங்களினால் வந்த பெயராகும்.

“திருக்குற்றாலத்தில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் பெருமானுக்கு குற்றாலநாதர் என்பது பெயர். அவரே பலாமரத்திற்குள்ளிருந்து வந்தவர் என்றும், பலா மரத்தையே கோயிலாகக் கொண்டு வீற்றிருக்கிற காரணத்தால் குற்றாலநாதருக்குக் குறும்பலா ஈசர் என்னும் பெயருமுண்டு (Sanmugasundaram, 2012).”

கோயில்கள் வளர்ந்தாலும் அங்குள்ள தலவிருட்சங்களுக்குத் தனியிடம் ஒதுக்கி அதனையும் வழிபடுபொருளாக்கினர். ‘விருட்சம்’ என்னும் சொல் பெருகுதல் என்னும் பொருளைத் தரும். ஒரு மரம் பல மரங்களாகப் பெருகுதல் போலவே மக்கள் வாழ்வும் மரங்களை வணங்குவதால் பெருகும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இதனடிப்படையில் எல்லாக் கோயில்களிலும் ஒவ்வொரு மரம் தலமரமாக விளங்குகிறது. இத்தகைய தலவிருட்சங்களில் கொன்றை, வில்வம், நாகலிங்கம், வன்னி, அத்தி போன்றவை அடங்குகின்றன.

## இறைவனும் இயற்கையும்

இறைவன் ஒருநாமம் ஓருருவம் என ஒன்றும் இல்லாதவன். அவன் அறிவாக எங்கும் நிறைந்திருப்பவன். இவ்வறிவுப் பொருளின் உண்மையை அதன் வடிவான இயற்கையைக் கொண்டே உணர வேண்டும். இயற்கை இறைவனது உடல், அவ்வுடலுள் உயிராயிருப்பவன் இறைவன். நமது உடலில் எவ்வாறு உயிர் நிலவுகிறதோ அதுபோல இயற்கையுள் இறைவன் நிலவுகிறான். நம் கண்ணுக்குப் புலனாகும் உயிர் - உடல் உண்மையைப் போல இயற்கை வடிவங்களைக் கொண்டே இறையுண்மையை உணர வேண்டும். இயற்கைவழி இறைவனை உணர்ந்தவரே ஞானிகளெனக் கருதப்படுவர். நமது நாடு வெப்பம் மிகுந்த நாடு. இங்கு இயற்கையாகிய வெம்மை வழியாக இறைவனை நம் பெரியோர் உணர்ந்து இறைவனுக்குரிய இயற்கை வடிவம் தீ வடிவமெனக் கொண்டனர். வைணவர் ‘பச்சை மாமலைமேனி’ என இறைவனைக் கண்டது போல சிவனை மாணிக்கவாசகர், திருவாசகத்தில் ‘தூயமேனிச் சுடர்விடு சோதி’, ‘ஆதியும் அந்த முமில்லா அரும்பெருஞ் சோதி’, ‘விரி சுடராய் நின்ற மெய்யன்’, ‘செந்தழல் போற் றிருமேனி’, ‘ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்று’ என்றெல்லாம் புகழ்ந்து ஐம்பூதத்தில் ஒன்றாகிய நெருப்பினோடு ஒப்புமைப்படுத்துகிறார்.

மேலும் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழ்மக்கள் அவ்வியற்கையில் இழைந்தோடும் அழகினை வியந்து போற்றினர். அதில் இறைமையைக் கண்டு, அதனை முருகு என்றனர். இச்சொல்லின் பொருளினைத் தி.தயானந்தன் குறிப்பிடும்போது,

“அழகு, இளமை, மணம், இறவாமை என்று’முருகு’ என்னும் சொல்லிற்குப் பொருள் தருவர். இந்நான்கினையும் தொகுத்தடக்கும் இயற்கை வழியே இறைவனைக் கண்டனர். தமிழ்மக்கள் சிவனைச் சொக்கன்(அழகன்) என்னும் பெயரால் அழைத்து வந்துள்ளதும் இங்குக் கருதத்தக்கது (Thayanandhan, 2012).”

பழந்தமிழர் மலையிலுள்ள இயற்கை உணவைக் கொண்டு, இயற்கை உடையணிந்து, உலகாகிய இயற்கை நூலினைப் பயின்று, இயற்கையுடன் கூடி, இயற்கையைப் பாடி, இன்ப வாழ்வு நடத்தி வந்தபோது அவர்களுக்கு இயற்கையின் அழியா அழகு புலனாகியது. அந்நிலை இயற்கையோடு ஒன்றி வாழும்போதே ஏற்படும். இயற்கை அழகை விரும்புவோர், இறையின்பத்தை எளிதில் நுகர முடியும். இயற்கையை அன்னை எனவும், மாயாதேவி எனவும் திரு.வி.க. குறிப்பிடுகிறார். அவர் கூறுகையில், “என்னுடன் உடலாய், அவ்வுடல்வழி யான் அறிவு விளங்கப் பெறவும் இன்ப நுகரவும்,

செஞ்ஞாயிற்றொளியாய் வெள்ளிய நிலவாய், எழின் மலையாய், மணிகொழிக்கும் அருவியாய், செழும்பொழிலாய், அழகிய மலராய், இனிய பெண்ணமுதாய், செம்பாவாய், பல்கலையாய் எனக்குறு துணை செய்து வரும் எனது இயற்கை அன்னை" எனக் கூறுகிறார் (Kalayanasundaranar, 2012).

திரு.வி.க ஐம்பூதம் பற்றிக் கூறும்போது, "ஆகாய ஒலியைச் 'சப்தபிரமம்' என்பர். ஒலி ஆகாயத்தின் கூறு ஆகாயம் என்னும் பூதம், எல்லாப் பூதங்களிலும் பாய்ந்து விரவி நீக்கமற நிறைந்து நிற்பது ஆகாயமில்லாத பூதமில்லை இடமுமில்லை " என ஐம்பூதங்கள் 'ஆகாயம்' என்னும் பூதத்திலிருந்து தோன்றியதைக் குறிப்பிடுகிறார் (Kalayanasundaranar, 2012).

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் இறைவனைப் போற்றும்போது, ஐம்பூதங்களையும் ஒன்றிணைக்கிறார்.

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி

நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி

தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி

வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி" எனக்குறிப்பிட்டு, ஐந்து, நான்கு எனக் கூறிச் செல்லும் எண்ணிக்கையில், ஐம்புலனுணர்வுகளை இணைத்துச் செல்கிறார் (Kalayanasundaranar, 2012).

"பாரிடை ஐந்து என்பது - சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனவும்

நீரிடை நான்கு என்பது - சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம் எனவும்

தீயிடை மூன்று என்பது - சப்தம், ஸ்பரிசம், ரூபம் எனவும்

வளியிடை இரண்டு என்பது - சப்தம், ஸ்பரிசம் எனவும்

வெளியிடை ஒன்று என்பது - சப்தம் எனவும்" கொண்டு எல்லாப் பூதங்களிலும் 'சப்தம்' இருப்பதை உணரலாம். மேலும் ஆகாயம் என்னும் பூதம் காற்று, தீ, நீர், மண், ஆகிய நான்கு பூதங்களிடையே நீக்கமற நிறைந்திருப்பது. நமக்கு அருவப் பொருட்கள் எல்லாம் ஒரே இடத்தில் இணைந்து இருக்கும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. எனவே இறைவன், உலகு - அதிலுள்ள உயிர்கள் ஆகியவற்றில் உறைவதை உணரமுடிகிறது.

சிவபிரானுக்கெனத் தனிக்கோயில்கள் பல உள்ளன. எனினும் 385 திருக்கோயில்களைச் சிறப்புமிக்க சிவத்தலங்களாகக் குறிப்பிடுவர். சிவபிரானுக்குரிய ஐம்பெரும் பூதத்தலங்களாவன:

| | | |
|---|---|---|
| நிலம்(பிருதிவித் தலம்) | - | காஞ்சி (திருவாரூர்) |
| நீர் (அப்புத்தலம்) | - | திருவானைக்கா |
| தீ (அக்கினித்தலம்) | - | திருவண்ணாமலை |
| காற்று(வாயுத்தலம்) | - | திருக்காளத்தி |
| ஆகாயம்(ஆகாயத்தலம்) | - | சிதம்பரம் |

எனப் பிரித்திருப்பதன்வழி ஐம்பூதங்களில் இறைவன் நிறைந்திருப்பதை அறியலாம். இறைவன் இயற்கையை உடலாகக் கொண்டு அவற்றில் உயிராக உள்ளான். அப்பர் தமது தேவாரத்தில், 'இருநிலனாய்த் தீயாகி, நீருமாகி, காற்றுமாகி அருநிலைய திங்களாய் ஞாயிறாகி, ஆகாசமா யட்ட மூர்த்தியாகிப் பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி, நெருநலையாய், இன்றாகி, நாளையாகி, நிபுர்புன் சடையடிகள் நின்றவாரே எனப்பாடி, ஐம்பூத வடிவாகவும் பிற பூமி மற்றும் ஆகாயத்தில் காணப்படும் அனைத்துமாகவும் காலங்களாகவும் அனைத்துயிர்களாகவும் காணப்படுவதாகக் குறிப்பிடுகிறார்.

திருஞானசம்பந்தர் தமிழ்நாடு முழுதும் சுற்றுப்பயணம் செய்தவர். அவரது பாடல்கள் ஒவ்வொன்றிலும் பெரும்பாலும் இரண்டு அடிகள் இயற்கை வர்ணனையாக உள்ளன. அடுத்த இரண்டு வரிகள் இறைவனைப் பற்றி அமைகின்றன. எனவே அவரது பாடல்கள் இயற்கை மீதும்இ இறைவன் மீதும் அவருக்கு உள்ள நாட்டத்தைப் புலப்படுத்துவனவாக உள்ளன என்பார் ஆ.வேலுப்பிள்ளை.

சம்பந்தர் ‘கானப்பேர்’ தலம் பற்றிப் பாடும்போது, இறைவன் எங்கெங்கு இருப்பான் என்பதை,

“நிறையுடைய நெஞ்சுளும் நீருளும் பூவுளும்

பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்

கறையுடை மிடற்று அண்ணல் கருதிய கானப்பேர்

குறையுடை அவர்க்கலால் களைகிலார் குற்றமே”

எனப் பாடியுள்ள இவ்வரிகளில் குற்றங்குறைகளற்ற தூய்மையான அன்பு நிறைந்த மனத்திலேயும் குளிர்ந்த நீர்நிலையிலும் பூக்களிலும் இனிய ஒலிபொருந்திய மிருதங்க ஓசையிலும் அன்போடு கொடுக்கும் பலியிலும் கருத்தும் இனிமையும் நிறைந்த பாட்டிலும் இறைவன் வாழ்வதாகக் கூறுகிறார் (Kalayanasundaranar, 2012). இதன்வழி இயற்கையிலும் இயற்கைசார் இடங்களிலும் இறைவன் வீற்றிருப்பதை அறியமுடிகிறது.

இதேபோல் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர், இயற்கை அளிக்கும் இன்பத்தை இறைவனை மறவாமையால் பெறலாம் என்பதை ஒரு பாடலில் குறிப்பிடுகிறார். “மாசில் வீணையும் மாலை மதியமும்

"வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே”

என்ற இப்பாடலில் அப்பர், சமணர்கள் தமக்குத் துன்பமிழைக்கும் போது, நிலவொளி, இனிய தென்றல், இளவேனில், வண்டொலிக்கும் பொய்கை ஆகிய இவையெல்லாம் விட ஈசனின் திருவடி நிழல் தரும் சுகமே மேல் என்கிறார். இறைவன் படைத்த இயற்கை என்னதான் சுகத்தைத் தந்தாலும், இறைவனின் கமல பாதங்களில் ஒன்றுதலே சிறந்தது என்கிறார். இறையே அறம் என உணர்த்துகிறார் (Kalayanasundaranar, 2012).

## இயற்கையால் அமைந்த தலச்சூழல்

ஞானசம்பந்தர் திருவையாற்றை வருணிக்கிறார்-

“வலம்வந்த மட வார்கள் நடமாட

முழவதிர மழையென் றஞ்சி

சிலமந்தி அலமந்து மர மேறி

முகில் பார்க்கும் திருவையாறே”

“இஞ்சாயல் இளந்தெங்கின் பழம் வீழ

இளமேதி இரிந்தங்கு ஒடி

செஞ்சாலி கதிர் உலக்கி செழுங்கமல

வயல் படியும் திருவையாறே”

“குன்றெலாம் குயில் கூவ கொழும்பிரச

மலர் பாய்ந்து வாச மங்கு

தென்றலார் அடிவருட செழுங்கரும்பு

கண்வளரும் திருவையாறே"

இயற்கைச்சூழலில் திருவையாற்றுத்தலம் அமைந்திருப்பதை விளக்குவதோடு அத்தலம் அறச்சிந்தனைகளை வெளிப்படுத்தும் தலச்சூழலாக இருந்ததைக் குறிப்பிடுகிறார் (Chidambaranar Samy, 2008).

உலகில் மனிதஇனம் உருப்பெறுவதற்குப் பலகோடி ஆண்டுகளுக்கு முன்னரே தாவரவினம் உண்டானது என அறிஞர்கள் கூறுகின்றனர். உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் முற்பட்ட பிறப்பு தாவர இனத்தைச் சார்ந்ததாகும். பாசிகளிலும் புல் பூண்டுகளிலிருந்தும் தான் பலகோடி உயிரினங்கள் கிளைத்திருக்கின்றன என்பதனை மாணிக்கவாசகர்,

"புல்லாகிப் பூண்டாய்

புழுவாய் மரமாகி

பல்மிருக மாகிப்

பறவையாய்ப் பாம்பாகி

கல்லா மனிதராய்ப்

பேயாய்க் கணங்களாய்

செல்லாஅ நின்றஇத்

தாவர சங்கமத்துள்

எல்லாஅப் பிறப்பும்

மீறிந்திளைத் தேன்எம்பெருமான்"

என்று குறிப்பிடுகிறார் (Chidambaranar Samy, 2008).

இங்ஙனம் அடியவர்கள் இயற்கையில் இறை கலந்திருக்கும் பாங்கினைப் படைத்துக் காட்டுவதோடு, அவ்வியற்கை நிறைந்த தலச்சூழல் உயிரினங்கள் வாழ ஏற்புடையதாகப் படைக்கப்பட்டிருப்பதைப் பின்வருமாறு விளக்கிச் செல்கின்றனர்.

'திருக்குடந்தை' தலத்தில் குலைகுலையாய்த் தென்னைமரத்தின் காய்களும் தண்மையான வாழைமரங்களும் பெருகியுள்ள இடமாகத் தலம் விளங்குவதை,

"குலையார் தெங்கு குளிர்கொள்வாழை"

என்ற அடியில் எடுத்துரைத்து அங்குள்ள குளிர்ச்சியான சூழலால் தென்னையும் வாழையும் உற்பத்தியை மிகுவிப்பதைப் பதிவு செய்துள்ளார் (Natarasan, 2004).

திருநாவுக்கரசர் திருத்தில்லை தலத்தில்,

"பாளை யுடைக்கமுகு ஓங்கிப்

பன்மாட நெருங்கியெங்கும்"

பாக்குமரங்கள் மாடங்கள் அளவு உயர்ந்து நிற்பதையும் எண்ணிக்கையில் (உற்பத்தியில்) மிகுந்திருப்பதையும் இவ்வரிகளில் படைத்துக் காட்டுகிறார் (Natarasan, 2004). திருவண்ணாமலை,

"ஆலுநீர் கொண்டல் பூக

ஆணயணா மலையுளானே"

என மழைப்பொழிவில் சிறந்தும் பாக்குமரம் எண்ணிக்கையில் மிகுந்தும் திகழ்வது இத்தலச் சூழலில் காட்டப்படுகிறது (Natarasan, 2004). சுந்தரர் பாக்குமரத்தின் விளைச்சலை,

“வரிவரால்உக ளுங்கழனியுள்

பாளைஒண் கமுகம்

புடைசூழ் திருப்பனையூர்”

திருப்பனையூர் தலத்தில் ‘பனை’ தலவிருட்சமாக இருந்தாலும் அங்கு நல்விளைச்சலையுடைய கமுக மரங்கள் சூழ்ந்திருப்பதாகக் குறிப்பிடுகிறார் (Natarasan, 2004).

திருஞானசம்பந்தர் ‘திருவானைக்கா’ தலம் பற்றிப் பாடும்போது, ஒரு பதிகம் முழுவதும் வெண்ணாவல் மரம் பற்றி,

“விழவாரும் வெணாவலின் மேவியஎம்

அழகா”

என ‘விழவு’ ஆரவாரமிக்க இடமாகத் திருவானைக்கா விளங்குவதையும் அங்குள்ள வெண்ணாவலின் கீழ் அமர்ந்திருக்கும் இறைவன் என்பதையும் இவ்வரிகளில் உணர்த்துகின்றார் (Natarasan, 2004).

“விழையால்எ னையாளும் வெணாவலுளாய்”

எனப் பத்துப்பாடல்களிலும் ‘வெணாவலுளாய்’ எனக் குறிப்பிட்டு, நாவல் மரத்தின் கீழிருக்கும் இறைவன் எனப் பதிவு செய்கிறார் (Natarasan, 2004).

“விரிதொறும் வண்டினங்கள் பெடைவாய

மதுவுண்டு பேரா திருக்கும் பெரும்பதியே”

எனத் ‘திருக்கழுமலம்’ தலத்தில் வண்டுகள் தங்கள்பெடையுடன் மதுவுண்டு, அவ்விடத்திலே தங்கியிருப்பதாகக் குறிப்பிடுகிறார் (Natarasan, 2004).

சுந்தரர், ‘திருநாகேச்சரம்’ தலத்தின் சோலைகளில் பறந்து திரியும் வண்டுகள் மலரும் நிலையிலுள்ள மல்லிகை மலரிலும் சண்பக மலரிலும் மகரந்தத்தை நுகர்ந்து இசையைப் பாடுவதாக,

“விரிதரு மல்லிகையும் மலர்ச்சண்பகமும் அளைந்து

திரிதரு வண்டு பண்செய் திருநாகேச்சரம்”

எனக் குறிப்பிடுகிறார் (Natarasan, 2004). தலச்சூழல் மன இன்பத்தை விளைவிக்கும் அறச்சூழலாக விளங்குவதை அறியமுடிகிறது.

## இயற்கைச் சூழலால் உயிரினங்கள் வெளிப்படுத்தும் மகிழ்நிலை

நாவுக்கரசர் தமது பாடலில்,

“அரித்தொழு கும்வெள் ளருவி ஐயாறு அடைகின்ற போது

வரிக்குயில் பேடையொடு ஆடி வைகி

வருவன கண்டேன்”

எனத் திருவையாறு திருத்தலம், காவிரி, குடமுருட்டி, வெண்ணாறு, வெட்டாறு, வடவாறு என ஐந்து ஆறுகள் பாய்வதால் ஐயாறு எனப் பெயர் பெற்று தூய நன்னீர் விளங்கும் இத்தலத்தில் நாள்தோறும் ஆண்குயிலானது தன் இனிய பெண் குயிலோடு ஆடிப்பாடி மகிழ்வதாகக் குறிப்பிடுகிறார் (Natarasan, 2004).

திருப்புகலூரிலுள்ள தலத்தில் வெண்சங்கு, பறை போன்ற கருவிகளும் அடியவர்களின் கால்களில் கட்டிய சதங்கை ஒலியும் தாளஓசை, இன்னோசை முதலியனவும் வெளிப்படுகின்றன.

இதைக்கேட்ட மயில்கள் மழைக்கு முன்னே தொடங்கும் இடிமுழக்கம் எனக் களித்து நடனம் புரிந்த செய்தி அமைந்துள்ளது.

"நிலவெண்சங்கும் பறையும் ஆர்ப்ப நிற்கில்லாப்

பலரும் இட்ட கல்லவடங்கள் பரந்தெங்கும்

கலவமஞ்ஞை கார்என்று எண்மிக் களித்துவந்து

அலமர்ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்"

இப்பாடலில் நாவுக்கரசர், மயில்கள் மழைமேகம் கண்டால் களிப்போடு நடனம் புரியும் என்ற சூழலியல் நோக்கினைப் புலப்படுத்துகிறார் (Natarasan, 2004).

குற்றாலத் தலச்சூழல் குறித்துச் சம்பந்தர்,

"அந்தண் சாரல் கீட்பலவும் கீண்டு கிளை கிளையன்

மந்திபாய்ந்து உண்டுவிண்ட கோட்பலவின் தீங்கனியை

மாக்கடுவன் உண்டு உகளும் குறும்பலாவே"

எனப் பெண்குரங்கானது கிளைக்குக் கிளை தாவிப் பலாப்பழத்தினை உண்டுவிட்டு வைத்த எஞ்சிய கனியை ஆண்குரங்கானது உண்பதைக் குறிப்பிடுகிறார் (Natarasan, 2004).

சம்பந்தர், திருக்கொடுங்குன்றம் தலத்தில் யானைக்கூட்டங்கள் முற்றிய மூங்கில்களை முறித்து, அதன் முத்துக்களை உண்டு, அங்குள்ள சுனையில் நீராடும் நிகழ்வை,

"முட்டாமுது கரியின்னினம் முதுவேய்களை முனிந்து

குட்டாச்சுனை அவைமண்டி நின்று ஆடும்கொடுங்குன்றம்"

என இப்பாடல் உணர்த்துகிறது (Natarasan, 2004). யானைக்குப் பிடித்த உணவாக, மூங்கில் எடுத்துக்காட்டப்படுகிறது. உணவிற்குப் பின் சுனையில் நீராடி ஓய்வெடுக்கும் யானைகள் இத்தலத்திலுள்ளன.

## இயற்கை வணங்கும் இறை

"கோளரி உழுவையோடு கொலையானை கேழல்

கொடுநாக மோடுகரடி ஆளரி நல்லநல்ல

அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே"

எனச் சம்பந்தர் இப்பாடலில் திருமறைக்காட்டுத் தலத்திற்குச் சிங்கம், புலி, கொலையானை, பன்றி, கொடியநாகம், கரடி ஆகியன வருகை தருவதாகவும் அவை, இறைவனை வழிபட வரும் மாந்தர்களுக்கு இன்னலைத் தரமாட்டா, எனவும் குறிப்பிட்டுச் செல்கிறார். விலங்குகளின் வாழிடங்களுக்கு மனிதர்களால் இடையூறு ஏற்படாத வரை, அவற்றின் துன்பம் இழைக்காத பண்பினை உணர்த்துகிறார். இதன்வழி, இறையை வழிபடுவதன் மூலம் அத்தலத்திற்கு வரும் விலங்குகளை வழிபட்டு, பாதுகாக்க வேண்டுமென்ற அறமாண்பினை எடுத்துரைக்கின்றார் (Natarasan, 2004).

'திருக்கானப்பேர்' தலத்தில் பெண்யானைகள் சூழ்ந்து செல்ல பெரிய துதிக்கையையுடைய ஆண்யானை தலத்தீர்த்தத்தில் மூழ்கி, மலர்களை ஏந்திக் கொண்டு இறைவனை வழிபடுகின்றன என்பதைச் சம்பந்தர்,

"பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீ

விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்"

என்ற பாடலில் குறிப்பிடுகிறார். யானைகள் மனிதர்களுக்கு ஆசி வழங்கக் கூடியனவாகவும் அவற்றின் நுண்ணறிவுத்திறனால் இறைவனைப் பூசிப்பதும் காட்டப்பட்டுள்ளன (Natarasan, 2004).

திருவண்ணாமலை தலத்தில் பல்லின விலங்குகளும் ஒன்றாய் உலவுவதை,

“ஏனத் திரளோடு இனமான்கரடி இழியும்இரவின்கண்

ஆனைத் திரள்வந்து அணையும் சாரல்

அண்ணா மலையாரே”

என்னும் பாடல் சுட்டுகிறது (Natarasan, 2004).

## இயற்கையில் இறையென்னும் அறம்

திருநாவுக்கரசர், சிவனும் சக்தியும் ஒன்றிணைந்து வருவது போல மானினத்தின் இணையில் இறைவடிவைக் கண்டதாகத் திருவையாற்றுச் சூழலில்,

“ஐயாறு அடைகின்ற போது கருங்கலை பேடையொடு

ஆடிக் கலந்து வருவன கண்டேன்”

இவ்வரிகளில் விளக்கிச் செல்கிறார். இங்கு சூழல்தொகுப்பில் மானினம் அழிவுறாமல் பாதுகாக்க, இறைவனோடு ஒப்புமைப்படுத்தப்படுகின்றன. இறைவன் கலந்திருக்கும் இத்தலச்சூழலில் மானினம் மகிழ்வோடு இருப்பதை உணரமுடிகிறது (Natarasan, 2004).

திருநாவுக்கரசர், திருவையாற்றுத்தலத்திற்கு,

“ஐயாறு அடைகின்ற போது இளமண

நாகு தழுவி ஏறுவருவன கண்டேன்”

இளமைத் தன்மையுடைய பசுவுடன் எருது இணையாக வருவதைக் கூறி, அவ்வுயிரினச் சேர்க்கையில் சிவனையும் சக்தியையும் கண்டதாகக் குறிப்பிட்டு, உயிரினப் பாதுகாப்பிற்கு வழிவகுக்கிறார் (Natarasan, 2004).

## முடிவுரை

சைவ சமயம், இயற்கையறமாக உயிரினங்களைப் பாதுகாக்கவும் நீர்நிலைகளைப் பாதுகாக்கவும் இறைவனை இயற்கையில் கண்டு வணங்கிய பாங்கினை உணர்த்துகிறது. சைவ சமயம் புலப்படுத்தும் ஆன்மிக இயற்கையை உணர்ந்து கொண்டதோடு, இயற்கையில் ஆன்மிக அறத்தைத் தேட விழைய வேண்டும்.

## References


Chidambaranar Samy, (2008) Devarathirumozhi, Arivu publications, Chennai, India.

Kalayanasundaranar, T.V. (2012) Saiva Samaiyam, Saiva Veeliyeedu, Chennai, India.

Maruthidasan, (2015) Hindusamaiaya Karuththukal, Saivam Veeliyeedu, Chennai, India.

Muthusamypillai, (2012) Kovirkalanjiyam, Kalazhaga Veeliyeedu, Chennai, India.

Natarasan, P. R. (2004) Thirugnanasambanda Swamigal Devaram, Uma Pathippagam, Chennai, India.

Perumal, A. N. (1984) Tholpalam, Araiychi Niruvanam, Chennai, India.

Sanmugasundaram, (2012) Tamilum thavaraum, Saivam Veeliyeedu, Chennai, India.

Subbu Reddyar, N. (1982) Saiva Samaiya Vilakku, Sarvodhaya Illakkiya Pannai, Madurai, India.

Thayanandhan, T. (2012) Tamil Saivam, Kazhaga Veeliyeddu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License